www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 9

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

நேரம் : 3.00 மணி | **தமிழ்** | மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள்:15)

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

1. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

(அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை (ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
(இ) மோனை, எதுகை, இயைபு (ஈ) மோனை, முரண், அந்தாதி

2. அழியா வனப்பு - அடிக்கோடிட்ட சொல்லுக்கான இலக்கணக்குறிப்பு
(அ) வேற்றுமைத்தொகை (ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
(இ) பண்புத்தொகை (ஈ) வினைத்தொகை

3. பொருத்தமான விடையைத் தேர்க.
(அ) நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர் (ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
(இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
க) அ, இ உ) ஆ, இ ) அ, ஆ ச) அ, ஆ, இ

4. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை (ஆ) பூவரசமரம் (இ) வளம் (ஈ) பெரிய

5. பொருந்தாத இணை எது?
(அ) ஏறுகோள் - எருதுகட்டி (ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
(இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு (ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

6. சொற்றொடர்களை முறைப்படுத்துக.
(அ) ஏறுதழுவுதல் என்பதை (ஆ) தமிழ் அகராதி (இ) தழுவிப்பிடித்தல் என்கிறது
1. அ, ஆ, இ 2. ஆ, இ, அ 3. இ, ஆ, அ 4. இ, அ, ஆ

7. அறிவியல் வாகனத்தில் ஏற்றப்படுவேன் எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன் - நான் யார் என்று கண்டுபிடிக்கவும்.
(அ) இணையம் (ஆ) தமிழ் (இ) கணினி (ஈ) ஏவுகணை

8. பொருந்தா ஒன்றைக் கண்டறிக.
(அ) தொடுதல் (ஆ) கேட்டல் (இ) நுகர்தல் (ஈ) ஆடல்

9. "தமிழ்நாடு" என்று சென்னை மாகாணத்தின் பெயரை மாற்றியவர் --------
(அ) அண்ணா (ஆ) காமராசர் (இ) எம்.ஜி.ஆர் (ஈ) கருணாநிதி

10. பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு சிறந்த சான்று
(அ) மாமல்லபுரம் (ஆ) பிள்ளையார்பட்டி
(இ) திரிபுவனவீரேசுவரம் (ஈ) தாடிக்கொம்பு

11. ஐந்து சால்புகளில் இரண்டு
(அ) வானமும் நாணமும் (ஆ) நாணமும் இணக்கமும்
(இ) இணக்கமும் சுணக்கமும் (ஈ) இணக்கமும் பிணக்கமும்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி. (12,13,14,15)

மன்னிய முதுமொழியின் வளமார் வாய்மொழி(இ)
இன்னிளம் குருளைக்கு இணைந்து ஒப்பிடத்
தன்னிறல் தங்கலே தாய்மை மீதூற
கன்னரில் வலியசெந் தாய்உடை மிகுமே

12. மன்னிய - இலக்கணக்குறிப்பு தருக.

(அ) வினைத்தொகை (ஆ) வினையெச்சம் (இ) பெயரெச்சம் (ஈ) தொழிற்பெயர்

13. இன்னிளம் குருளை – இதில் "குருளை" என்பதன் பொருள்

(அ) இனிய (ஆ) குட்டி (இ) தாய் (ஈ) சிறந்த

14. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

(அ) நாச்சியார் திருமொழி (ஆ) இராவண காவியம் (இ) புறநானூறு (ஈ) அகநானூறு

15. இப்பாடலின் ஆசிரியர் யார்?

(அ) கம்பர் (ஆ) புலவர் குழந்தை (இ) ஆண்டாள் (ஈ) இளங்கோவடிகள்

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

17. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) நீர்நிலைகளை உருவாக்குபவர்கள் உயிரை உருவாக்குபவர்கள் என்று போற்றப்பட்டனர்.

ஆ) இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படும் காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகும்.

18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

19. செயற்கைக்கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியைப் பற்றி திரு. சிவன் கூறுவது யாது?

20. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?

21. 'சுழன்றும்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. மரபுத்தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

1. எட்டாக்கனி 2. மேளதாளத்துடன்

23. பிழை நீக்கி எழுதுக.

1. நல்ல தமிழுக்கு எழுதுவோம் 2. குழலியும் பாடத் தெரியும்

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக – விளைவது

25. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.

*(விலங்கு, எழுதி, அகல், கால், அலை)*

அ) எண்ணெய் ஊற்றி ------- விளக்கு ஏற்றியவுடன் இடத்தை விட்டு -------

ஆ) எனக்கு ------- பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்; பார்த்து உன் ------- ஐ வை.

26. கலைச்சொல் தருக. 1. Tropical zone 2. Lexicon

27. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

28. பின்வரும் சொற்களுக்கு வேர்ச்சொல்லை எழுதுக.
வென்றான், கேட்டான், சொன்னான், [illegible]

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

29. [illegible] தமிழர் [illegible] சிறப்பைக் குறித்து எழுதுக

30. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நிகழ்வை விளக்குக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். பஞ்சலோகமான பொருள்களில் சிற்பங்கள் செய்யலாம் என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. பழமையான தொல்காப்பிய நூலில் சிற்பங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்ச்சிற்பிகள் கல்லில் வடித்த கவிதைகளே சிற்பங்கள் ஆகும்.

1. சிற்பங்களை எவற்றின் அடிப்படையில் இரண்டாக பிரித்துள்ளனர்?
2. கல்லில் வடித்த கவிதைகள் எது?
3. உரைப்பத்திக்கு பொருத்தமான தலைப்பை இடுக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2X3=6

34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. இராவணகாவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

33. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34. அ) 'காடெல்லாம்' எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) 'தித்திக்கும்' எனத் தொடங்கி 'உண்டோ' என முடியும் வரை தமிழ்விடு தூது பாடலை எழுதுக.

பிரிவு – 3 (மதிப்பெண்கள்:6)

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

35. வல்லினம் மிகும் இடங்கள் ஏதேனும் நான்கினை எழுதுக.

36. புணர்ச்சி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

37. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் எழுதுக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5X5=25

38. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

39. அ) உனது மாவட்டத்தின் சிறப்புகளைப் பட்டியலிட்டு நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உனது ஊருக்கு நூலக வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

41. அ) நயம் பாராட்டுக.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சிலிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு என எரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வான்த் தகளியிற் பெருவிளக்கே!
கடலிலே கோடி கோடி கதிர்க்கைகள் ஊன்றுகின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க்கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅளாவ அமைந்தனை! பரிதி வாழி!

– பாரதிதாசன்

(அல்லது)

42. அ) மொழிபெயர்க்க.

1. Every flower is a soul blossoming in nature – *Gerard De Nerval*
2. Sunset Is still my favourite colour, and rainbow is second - *Mattie Stepanek*
3. An early morning walk is a blessing for the whole day – *Henry David Thoreau.*
4. Just living is not enough... One must have sunshine, freedom, and a little flower –

***Hans Christian Anderson***

(அல்லது)

ஆ) உன்னை மகிழ்செய்த பணிகள் குறித்து எழுதுக.

பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24**

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

44. அ) இந்திய விண்வெளி குறித்த செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

45. அ) நீங்கள் கொண்டாடும் விழா பற்றிய செய்திகளைத் தொகுத்து கட்டுரை வடிவில் எழுதுக.

(அல்லது)

ஆ) இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர்களின் பங்கு குறித்து கட்டுரை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com